**2.** பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

(அ) போக்குவரத்துச் சாதனங்கள் மக்களையும் பொருட்களையும் இடத்துக்கிடம் கொண்டு செல்பவை மட்டுமல்ல. அவை ஊர், நகரம், நாடு ஆகியவற்றை இணைக்கின்றன; பொருளாதார விருத்திக்கும் பண்பாட்டுப் பரிமாற்றத்துக்கும் உதவுகின்றன. பல்வேறு இன, மத, மொழி மக்களைச் சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்துகின்றன. அதே வேளை, நோய்த் தொற்று, போதை வஸ்து கடத்தல், விபத்து முதலியவற்றுக்கும் இடமளிக்கின்றன. இவ்வாறான கருத்துக்களை உள்ளடக்கி இன்றைய உலகில் போக்குவரத்துச் சாதனங்கள் வகிக்கும் பங்கு பற்றிய ஒரு **விளக்கக் கட்டுரை**.

(ஆ) தமிழ் மொழிக்கு செம்மொழி அந்தஸ்த்து கிடைத்துள்ளது. இன்று உலகில் வழங்கும் செம்மொழிகளுள் ஒன்றாகத் தமிழ் மொழியும் விளங்குகின்றது. இம்மொழியின் தொன்மை, இலக்கிய, இலக்கண வளம், அதன் சிறப்பு ஆகியன பற்றியும் அம்மொழியைப் பேண வேண்டிய எமது கடப்பாடு பற்றியும் ஒரு **சொற்பொழிவு**.

(இ) சிக்கனம் என்பது மனித வாழ்விற்கு அவசியமானது. மனிதன் செம்மையாக வாழ்வதற்குப் பணம் இன்றியமையாதது. எனவே பணத்தைத் தேடுவது மட்டுமன்றி அதனைச் சிக்கனமாகவும் செலவு செய்ய வேண்டும். அத்துடன் நாம் அன்றாடம் பயன்படுத்துகின்ற அத்தியாவசியப் பொருள்களான நீர், மின்சாரம் போன்றவற்றையும் சிக்கனமாகப் பயன்படுத்தல் வேண்டும். மேலும், நேரத்தை விரயமாக்காது சிக்கனமாகப் பயன்படுத்துவதும் வாழ்க்கையின் உயர்வுக்கு இன்றியமையாததாகும். இக்கருத்துகளை வெளிப்படுத்தும் வகையில் இருவருக்கு இடையிலான ஓர் **உரையாடல்**.

(ஈ) கண்ணன் படிப்பில் திறமையானவன்; படித்து நல்ல நிலைக்கு வரவேண்டுமென்ற ஆர்வம் கொண்டவன், எனினும் அவனது நண்பர்களின் போதனைகளால் வெளிநாட்டுக்குச் செல்வதற்கான மோகம் அவனைப் பற்றிக் கொண்டது. படிப்பில் அவனது கவனம் குறைந்தது. எண்ணியபடி வெளிநாட்டிற்குப் போனான். ஆனால், அங்கு சென்றபின்தான் தாய்நாட்டின் அருமை புரிந்தது. அங்கு சென்ற இளைஞர்கள் பலர் தன்னைப் போலவே அவஸ்தைபடுவதைக் கண்டு கொண்டான். அவன் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்தான் ...... என்ற கருவை மையமாகக் கொண்ட ஒரு **சிறுகதை**.

*(25 புள்ளிகள்)*

**3.** கீழே தரப்பட்டுள்ள உரைப் பகுதியின் **சுருக்கத்தை** 40 – 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக).

வாழ்க்கை என்பது ஊண், உடை, உறையுள் முதலியவற்றைத் தேடிப்பெறும் முயற்சியில் தொடங்குவது. சமைத்து உண்ணல், நெய்து உடுத்தல், வீடு அமைத்து வாழ்தல், தற்காப்புக்காகப் பற்பல கருவிகள் இயற்றிக் கொள்ளல் முதலியன வாழ்க்கையின் முதற்படியில் நிகழ்வன. அந்நிலையில் பொருளே வாழ்க்கையின் நோக்கமாகவும் நாட்டமாகவும் அமையும். பொருளால் அதாவது ஊண், உடை முதலியவைகளால் இன்பம் பெற முயன்று அலைந்து அலைந்து வாடிய பின், மக்கள் வாழ்க்கையின் இரண்டாம் படியினை எய்துவர். உண்ணும் உணவுக்கும், உடுக்கும் உடைக்கும், இருக்கும் இடத்திற்கும் போராட வேண்டிய வறுமையில் சிக்குண்டு வருந்தும் மக்கள் இரண்டாம் படியினை எய்தார். கஞ்சிக் கவலை மிகுந்த நாட்டில் கலைக் கவலை எழாது; கடவுட் கவலையும் தோன்றாது. பசித்துன்பம் அலைக்கும் நாடு பண்பாடு எய்தாது. வேண்டிய உணவும் பெற்று, உடையும் பெற்று, இடம் முதலியனவும் பெற்றவரே இரண்டாம் படியை எய்தும் தகுதி வாய்ந்தவர். தமிழ்ச் சான்றோர் ஊர்களைப் புகழத் தொடங்கியபோது, மாடமாளிகையும் பிறவும் பற்றிப் புகழ்ந்துரைத்தலில் ஊக்கங்கொள்ளாமல் 'பசி என்பது அறியா ஊர்கள்' என்று புகழ்ந்த திறன் போற்றத் தக்கது. ஆதலின் வறுமை அற்ற நாடே முன்னேற்றத்திற்குத் தகுதியுற்ற நாடாகும். அந்நாட்டு மக்களே வயிற்று வாழ்வு என்னும் முதற்படியிலிருந்து கலைவாழ்வு என்னும் இரண்டாம் படிக்கு உயர வல்லவர். ஏனையோர் கலை கலை என்று முழங்குதல் ஆரவாரமே அன்றிச் சிறிதும் பயன்படாதது. இரண்டாம் நிலை உற்ற மக்கள் வயிற்றுக்கவலை அற்றவராய் புலன்களுக்குச் சிறந்த விருந்து தேடி அவற்றின் வாயிலாக இன்பம் பெற முயல்வர். கண்ணுக்கு இனிய காட்சியாக ஓவியம், சிற்பம், நாடகம் முதலியன தேடுவர். செவிக்கு இனிய விருந்தாக இசை, காவியம், கதை முதலியன நாடுவர். அவ்வாறே மற்றப் புலன்களுக்கும் ஏற்ற விருந்து விழைந்து தேடுவர். அந்நிலையில் கலை வளர்ச்சியே மக்களின் வாழ்க்கையாக அமையும்.

*(10 புள்ளிகள்)*

[பக். 7 ஐப் பார்க்க

4. பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் **பூரணமான வாக்கியங்களில்** விடை எழுதுக.

அருணன் உதித்தனன்; அம்புஜம் விண்டது;
அளிகளும் மொய்த்தன; பாராய்!
அம்மா நீ எழுந்தோடி வாராய்!

பசிய புல் நுனியில் பதித்தவெண் முத்தமோ ?
பனித்துளி தானோ ? நீ பாராய்!
பைங்கிளி! எழுந்தோடி வாராய்!

பொழுது விடிந்தது; பொற்கோழி கூவிற்று;
பூஞ்செடி பொலிவதைப் பாராய்!
பொன்னே! நீ எழுந்தோடி வாராய்!

காகம் கரைந்தது; காலையும் ஆயிற்று;
கனியுதிர் காவினைப் பாராய்!
கண்ணே! நீ எழுந்தோடி வாராய்!

(i) பொழுது விடிந்துவிட்டதாகக் கவிஞர் காட்டும் **மூன்று** நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுக.
(ii) இங்கு குழந்தை துயில் எழ, தாயானவள் எவ்வாறு தூண்டுகின்றாள் ?
(iii) 'கனி உதிர் காவினைப் பாராய்' இதன் பொருளை உமது சொந்த உரைநடையில் எழுதுக.
(iv) கவிஞர் இங்கு பனித்துளியின் அழகை வருணிக்கும் சிறப்பைக் குறிப்பிடுக.
(v) அருணன் உதித்தனன், அம்புஜம் விண்டது - இந்நிகழ்வுகளுக்கிடையேயான தொடர்பினை விளக்குக.

*(10 புள்ளிகள்)*

5. நீர் வாழும் பிரதேசத்தில் உள்ள பிரதான வீதி ஒன்று சேதமடைந்து வாகனப் போக்குவரத்துக்கு உகந்ததாக இல்லாமல் இருக்கின்றது. இதனால் பாடசாலை மாணவர்கள், நோயாளிகள், அலுவலர்கள் எனப் பலரும் பாதிக்கப்படுகின்றனர். எனவே அவ்வீதியைப் புனரமைக்க உடன் நடவடிக்கை எடுக்கும்படி உமது பிரதேசத்தின் உள்ளூராட்சி மன்றத் தலைவருக்கு **100** சொற்களில் ஒரு **கடிதம்** எழுதுக.

**அல்லது**

டெங்கு என்ற ஆட்கொல்லி நோய் தீவிரமாகப் பரவி வருவதால் அதனைக் கட்டுப்படுத்த பாடசாலைகளின் உட்புற, அயற்புறச் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி **100** சொற்களில் ஒரு **துண்டுப்பிரசுரம்** எழுதுக.

*(15 புள்ளிகள்)*

❊ ❊ ❊

106657

OL/2010/22-T-I, II

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

| 22 | T | I, II |
|---|---|---|

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2010 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2010 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2010

| | |
|---|---|
| දෙමළ භාෂාව හා සාහිත්‍යය I,II<br>தமிழ் மொழியும் இலக்கியமும் I,II<br>**Tamil Language and Literature I,II** | පැ තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>Three hours |

## தமிழ் மொழியும் இலக்கியமும் I

**கவனிக்க :**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் **I** இற்குரிய புள்ளிகள் **40** ஆகும்.

(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **(1), (2), (3), (4)** என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**

(iv) அவ்விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

● **பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. 'மின்னும் தார் வீமன் தன் மெய்ம் மரபு' - இங்கு **தார்** என்பதன் பொருள்
   (1) மலர் (2) கருமை (3) மாலை (4) முடி

2. 'மல்லல் மறுகில் மட நாகுடனாகச் செல்லும் மழவிடை' - **நாகு** என்பதன் ஒத்தகருத்துச் சொல்
   (1) பசு (2) எருது (3) காளை (4) ஆடு

3. பாரதியின் பாடல்களைப் பாமரரும் படித்தின்புறுகின்றனர். - **பாமரர்** என்பதன் எதிர்ப்பொருட் சொல்
   (1) அறிவிலிகள் (2) நகரத்தவர் (3) பண்டிதர் (4) புத்திசாலிகள்

4. 'மாரவேள் சிலை குனிக்க மயில் குனிக்கும் காலம்' - இங்கு **மாரவேள்** என்பவன்
   (1) முருகன் (2) சிவன் (3) நந்திவர்மன் (4) மன்மதன்

5. எந்தவொரு கலைப் படைப்பினையும் காய்தல் இன்றி நோக்கல் வேண்டும். - **காய்தல்** என்பதன் எதிர்ப்பொருட் சொல்
   (1) தேய்தல் (2) உவத்தல் (3) வெறுத்தல் (4) கண்டித்தல்

● **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6. இடையரும் இடைமகளிரான ஆய்ச்சியரும் வாழுமிடம்
   (1) குறிஞ்சி (2) முல்லை (3) மருதம் (4) நெய்தல்

7. அரசன் முதலானோர் உலாவரும்போது அதனைப் பொதுமக்கள் அறியும்படி கூறுபவன்
   (1) முரசறைவோன் (2) தூதுவன் (3) கட்டியகாரன் (4) கூத்தாடி

8. சிங்கத்தின் இளமைப் பெயர்
   (1) போதகம் (2) பறள் (3) அரி (4) குருளை

9. ஆலி, ஆழி, ஆளி என்பன முறையே தரும் பொருள்
   (1) ஒலி, கடல், சிங்கம் (2) கடல், ஒலி, சிங்கம்
   (3) சிங்கம், கடல், ஒலி (4) கடல், சிங்கம், ஒலி

10. பாத்திரம், கப்பல், ஆபரணம் எனப் பல பொருள்களைக் குறிக்கும் ஒரு சொல்
    (1) படகு (2) வளை (3) கலம் (4) அணி

[பக். 2 ஐப் பார்க்க

11. ஒருவருடைய வருகைக்காக ஆவலுடன் காத்திருத்தல் என்ற பொருள் தரும் அருஞ்சொற்றொடர்
   (1) குறுகுறு நடந்து சிறுகை நீட்டி (2) வழிமேல் விழிவைத்து
   (3) ஊணுறக்கம் இல்லாமல் (4) உணர்வொழி காலம்

12. பின்வருவனவற்றுள் ஒல்லாந்த மொழிச் சொற்கள் கொண்ட தொகுதி
   (1) கேத்தல், நொத்தாரிசு, தோம்பு (2) கடதாசி, கரத்தை, சப்பாத்து
   (3) குசினி, பீரோ, பட்டாளம் (4) பென்சில், மைல், சினிமா

13. குமரன் வேலைக்கு 'அப்ளிகேஷன்' (Application) அனுப்பினான். அப்ளிகேஷன் என்ற சொல்லின் தமிழ்ச் சொல்
   (1) படிவம் (2) விண்ணப்பம் (3) சான்றிதழ் (4) ஆவணம்

14. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன
   (1) ஐம்பொறி (2) ஐம்பூதம் (3) ஐம்புலன் (4) ஐம்பால்

15. ஏழை எளியவர் என்பது
   (1) இணைமொழித் தொடர் (2) அடுக்குத் தொடர்
   (3) மரபுத் தொடர் (4) உவமைத் தொடர்

● **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

16. அரும்பாடுபட்டு உயிர் வாழுதல் என்னும் பொருள் தரும் மரபுத் தொடர்
   (1) வயிறு கடித்தல் (2) வாய்ப்பூட்டுப் போடுதல்
   (3) வயிறு கழுவுதல் (4) வயிற்றிலடித்தல்

17. தொழுகள்ளரை நம்பி நடவாதீர் - தொழுகள்ளர் என்றால்
   (1) ஏமாற்றுக்காரர் (2) ஏமாளிகள்
   (3) அண்டிக்கெடுப்பவர் (4) களவு செய்பவர்

18. பின்வருவனவற்றுள் மகிழ்ச்சியான உணர்வினைப் புலப்படுத்தப் பயன்படும் தொடர்
   (1) ஓடிஆடி (2) ஓய்வு ஒழிவு (3) ஆடிப்பாடி (4) ஓட்டமும் நடையும்

19. இட்டுக் கெட்டார் எங்குமில்லை என்ற பழமொழியின் கருத்து
   (1) உண்மையைச் சொல்லிக் கெட்டவர் எங்குமில்லை.
   (2) தருமம் செய்து கெட்டவர் எங்குமில்லை.
   (3) சேமித்து வைத்துக் கெட்டவர் எங்குமில்லை.
   (4) பொறுமையாக இருந்து கெட்டவர் எங்குமில்லை.

20. நெருப்பில் விழுந்த தேள் எடுத்தவனையே கொட்டும் என்ற பழமொழி தரும் உட்பொருள்
   (1) தேள் நெருப்பில் விழுந்து விட்டால் அதனைக் காப்பாற்றக் கூடாது.
   (2) தீயவனுக்கு நன்மை செய்யப்போய் ஆபத்தை விலைக்கு வாங்குதல்.
   (3) தீயவனானாலும் ஒருவன் செய்த நன்றியை மறக்கமாட்டான்.
   (4) நெருப்பில் வீழ்ந்த தேள் வேதனையில் எடுத்தவனையே கொட்டிவிடும்.

● **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

21. பின்வருவனவற்றுள் வாக்கியம் **அல்லாதது** எது ?
   (1) யாது செய்வோம். (2) பொய் பேசாதீர்.
   (3) பரமனைப் பாடுங்கள். (4) கட்டறுந்த மாடு.

22. பின்வருவனவற்றுள் கூட்டுவாக்கியத்திற்கு உதாரணமாக அமைவது
   (1) மேகம் கலைந்தது; மழை பெய்தது; வெள்ளம் பாய்ந்தது.
   (2) மயில் அழகாக ஆடியது.
   (3) பாரதி ஒரு மகாகவி என்பது ஆய்வாளர் முடிவாகும்.
   (4) கண்ணன் குழல் ஊதினான்.

[பக். 3 ஐப் பார்க்க

106657



23. பூங்குழல் இனிமையாகப் பாடினாள் . இங்கு பூங்குழல் என்பது
   (1) அன்மொழித் தொகை (2) வேற்றுமைத் தொகை
   (3) உம்மைத் தொகை (4) உவமைத் தொகை

24. பின்வருவனவற்றுள் **பொருத்தமற்ற** தொகுதியைத் தெரிவு செய்க
   (1) கூட்டுப்பெயர் : வானொலி, குதிரைப்படை, கண்காட்சி
   (2) ஆக்கப் பெயர் : கொடையாளி, புத்திசாலி, முயற்சி
   (3) கூட்டு வினை : காட்டிக்கொடு, தந்தியடி, சுட்டிக்காட்டு
   (4) தெரிநிலை வினைமுற்று : செய்தேன், படித்தானை, படித்தான்

25. இறந்தான் என்பதை இறைவனடி எய்தினான் எனக் கூறும் வழக்கு
   (1) குழூஉக்குறி (2) இடக்கரடக்கல் (3) மங்கலம் (4) மரூஉ

26. செயப்படுபொருள் குன்றிய வகை வாக்கியத்திற்கு உதாரணம்
   (1) குமரன் நடந்து சென்றான். (2) குமரன் இனிமையாகப் பாடினான்.
   (3) குமரன் பாட்டுப் பாடினான். (4) குமரன் படித்தான்.

27. மிதிலை நகர் வாயில் கொடிகள் இராம இலக்குமணரை வாருங்கள் வாருங்கள் என அழைப்பன போல் அசைந்தன. இங்கு கையாளப்பட்டுள்ள அணி
   (1) உவமை (2) உருவகம் (3) தற்குறிப்பேற்றம் (4) உயர்வுநவிற்சி

28. போற்றினான் என்பதன் பகுப்பு
   (1) போற்ற + இன் + ஆன் (2) போற்றி + இன் + ஆன்
   (3) போற்று + இன் + ஆன் (4) போற் + றின் + ஆன்

29. மன்னனிற் கற்றோன் சிறந்தவன் இங்கு மன்னன் என்ற பெயர்ச் சொல்
   (1) நான்காம் வேற்றுமை உருபேற்றுள்ளது. (2) ஐந்தாம் வேற்றுமை உருபேற்றுள்ளது.
   (3) ஆறாம் வேற்றுமை உருபேற்றுள்ளது. (4) ஏழாம் வேற்றுமை உருபேற்றுள்ளது.

30. இணைப்பிடைச் சொல்லின் பின் காற்புள்ளி இடப்படும் என்பதற்கு உதாரணம்
   (1) கண்ணே, கலங்குவது ஏன் ?
   (2) இனி, ஆக வேண்டிய கருமங்களைக் கவனிப்போம்.
   (3) கண்ணன், கர்ணனிடம் பாண்டவருக்காகத் தூதுபோனான்.
   (4) தாய்மொழி, கணிதம், விஞ்ஞானம், சமயம், ஆங்கிலம், வரலாறு என்பன கருப்பாடங்களாகும்.

● பின்வரும் பந்திகளின் **பிரதான கருத்தைத்** தெரிவு செய்க.

31. மனிதனின் எதிரிகள் இரண்டு. ஒன்று பயம்; மற்றது கவலை. பயம் வலுப்படைத்த வியாதி; கவலை அரிக்கும் நோய். பயத்தாலும் கவலையாலும் மனிதன் வாழ்வை நரகமாக்கிக் கொள்கின்றான்; சூழ்ந்திருப்போர் வாழ்வையும் கெடுக்கின்றான்.
   (1) பயத்தைவிட கவலையினால் தான் மனிதன் அதிகம் பாதிக்கப்படுகிறான்.
   (2) மனிதனின் வாழ்வு பயத்தாலும் கவலையினாலும் பெரிதும் பாதிக்கப்படுகின்றது.
   (3) பயத்தாலும் கவலையாலும் மனிதன் தன்வாழ்வையும் பிறர் வாழ்வையும் கெடுக்கின்றான்.
   (4) மனிதனைச் சூழ்ந்திருப்போரின் எதிரிகளே பயமும் கவலையுமாகும்.

32. அக்காலத்தே வாழ்ந்த மக்கள் உடற்பயிற்சியின் அவசியத்தை உணர்ந்திருந்தனர். அனைவரும் உடற்பயிற்சி உடையவர்களாக விளங்கினர். அன்று கல்வி இரண்டாவதாகவே கொள்ளப்பட்டது. இக்காலத்தில் அந்நிலை பெரிதும் மாறுபட்டுவிட்டது. இளைஞர்கள் கல்வி கற்பதிலேயே கூடுதலான ஆர்வம் காட்டுகின்றனர்.
   (1) அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் கல்வியில் அக்கறை காட்டவில்லை.
   (2) இக்காலத்து இளைஞர்கள் உடற்பயிற்சிகளில் சிறிதேனும் அக்கறை செலுத்துவதில்லை.
   (3) அக்காலத்து மக்களுக்கும் இன்றைய இளைஞர்களுக்கும் வேறுபாடில்லை.
   (4) இக்காலத்து இளைஞர்கள் உடற்பயிற்சியைவிட கல்வி கற்பதிலேயே ஆர்வம் காட்டுகின்றனர்.

[பக். 4 ஐப் பார்க்க

- பின்வரும் வினாக்களிலுள்ள வாக்கியத்தின் முற்பகுதிக்கு மிகப் பொருத்தமான **முடிக்கும் பகுதியைத்** தெரிவு செய்க.

33. நீர் இங்கே இருந்தீரென நான் அறிந்திருந்தால்,
    (1) உடனே வருகிறேன். (2) உடனே வந்திருப்பேன்.
    (3) உடனே வந்திருந்தேன். (4) உடனே வருவேன்.

34. அந்த மரத்தின் ஒவ்வொரு
    (1) பழமும் நல்லது. (2) பழமும் நல்லவை.
    (3) பழங்களும் நல்லவை. (4) பழங்களும் நல்லது.

35. அரசன் எவ்வழிச் செல்கின்றானோ குடிகளும்
    (1) அங்ஙனமே செல்வர். (2) எவ்வழியே செல்வர்.
    (3) அவ்வழியே செல்வர். (4) அவ்வண்ணமே செல்வர்.

- பின்வருவனவற்றுள் சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்வரிசையைத் தெரிவு செய்க.

36. (1) குறிக்கோள், மேற்க்கோள், வேண்டுகோள், கருதுகோள்
    (2) திணைக்களம், களஞ்சியம், கொந்தளிப்பு, ஊழியம்
    (3) வளர்ச்சி, உயர்ச்சி, தொடற்ச்சி, தளர்ச்சி
    (4) சம்பளம், கம்பழி, உளவியல், நாளங்காடி

- **பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

37. வறியவர்களுக்கும் வலது குறைந்தோருக்கும் முதியோருக்கும் உண்டியும் உறையுளும் கொடுத்து ஆதரிப்பதற்கென .................. அமைக்கப்பட்டுள்ளன.
    (1) அன்னசாலைகள் (2) ஆதுலர்சாலைகள் (3) ஆச்சிரமங்கள் (4) பாசறைகள்

38. தேர்தல் நெருங்கி வருவதால் தேர்தல் .................. சூடுபிடித்துள்ளது.
    (1) விஞ்ஞாபனம் (2) பிரசுரம் (3) பிரசாரம் (4) வாக்குமூலம்

39. வகுப்பறை .................. மூலம் மாணவரது பாட அடைவு மட்டத்தை அறிந்து கொள்ளலாம்.
    (1) ஒதுக்கீடு (2) கணிப்பீடு (3) உள்ளீடு (4) தலையீடு

- **கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக் கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.**

40. (அ) பழமொழிகளை யார் எப்பொழுது இயற்றினர் என்று சொல்ல முடியாது.
    (ஆ) அவை அவ்வப்போதைய தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்துவிட்டு மறைந்து போகின்றன.
    (இ) அத்தகைய வாக்கியங்களே பழமொழிகள்.
    (ஈ) நாம் நாள்தோறும் பேசும் வாக்கியங்கள் அவ்வப்போது எம்மால் அமைக்கப்படுவன.
    (உ) எனினும் சிற்சில வாக்கியங்கள் பொருட்சிறப்பு மிக்கவையாகப் பிறந்து மீண்டும் மீண்டும் எடுத்தாளப்படும் தகுதியைப் பெற்றுவிடுகின்றன.
    (1) ஈ, ஆ, உ, இ, அ (2) ஆ, உ, இ, அ, ஈ
    (3) இ, ஈ, அ, உ, ஆ (4) அ, ஆ, உ, ஈ, இ

* *

[பக். 5 ஐப் பார்க்க

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
சிமுமு ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**22 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2010 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2010 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2010

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය I, II
தமிழ் மொழியும் இலக்கியமும் I, II
Tamil Language and Literature I, II

## தமிழ் மொழியும் இலக்கியமும் II

※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.
※ இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1.** சுருக்கமான விடை எழுதுக.

(i) பின்வருந் தொடரைப் பிரித்து எழுதுக.

பாய்தட்டிழைக்கப்பழகிக்கொண்டாள்.

(ii) சமூகம், சமுகம் என்ற சொற்களை அவற்றின் பொருள் புலப்படுமாறு தனித்தனி வாக்கியங்களில் அமைத்துக்காட்டுக.

(iii) 'பூ எல்லாம் துய்ய வாசம், காடெல்லாம் முனிவர் வாசம்' - இங்கே வாசம் என்ற சொல் தரும் இரு வேறு கருத்தினைத் தருக.

(iv) 'பாலாய் நெளிகின்ற நிலவில் இரவு குந்தியிருப்பாய் கிணற்றுக் கட்டில்' - இதில் வந்துள்ள அணியை விளக்குக.

(v) எனக்குத் தமிழ் பேசத் தெரியும்.

எனக்குச் சிங்களம் எழுதத் தெரியும்.

'உம்' என்ற இணைப்பிடைச் சொல்லைப் பயன்படுத்தி இவ்விரு வாக்கியங்களையும் ஒரு வாக்கியமாக எழுதுக.

(vi) தொழிலாளர் சங்கம் இம்முறை மேதினக் கூட்டத்தை கண்டியில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. - இவ்வாக்கியத்திலுள்ள வழுவைத் திருத்தி அதனை மீண்டும் எழுதுக.

(vii) நேர்முக வருணனையாளன் ஒருவனுக்கு இருக்க வேண்டிய திறன்களுள் மிக அத்தியாவசியமான இரண்டைத் தெரிவு செய்க.

விடயம் பற்றிய முன்னறிவு, மனனம் செய்தல், பாவனை பண்ணுதல், பாடும் ஆற்றல், சமயோசிதமாகப் பேசுதல்

(viii) பின்வரும் நிகழ்ச்சி நிரலை ஒழுங்குபடுத்துக.

தலைமையுரை, தேசியகீதம், வரவேற்புரை, நன்றியுரை, இறைவணக்கம், பிரதமவிருந்தினர் உரை,

(ix) வில்லுப்பாட்டு நிகழ்ச்சி ஒன்றினுக்கு, பின்வருவனவற்றுள் மிக அத்தியாவசியமாகத் தேவைப்படும் விடயங்கள் **இரண்டு** தருக.

உரையும் பாட்டும், அவலச்சுவை, இலக்கிய நடை, பாவனையுடன் கூடிய அங்க அசைவுகள்.

(x) இல.60 யாழ்ப்பாணம் 09.10.2010 கல்லூரி வீதி

- இங்கு ஒரு கடிதத்தின் முகவரி ஒழுங்கின்றிக் காணப்படுகின்றது. அதனை ஒழுங்குபடுத்தி பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறிகளைப் பிரயோகித்து எழுதுக.

*(20 புள்ளிகள்)*

[பக். 6 ஐப் பார்க்க